**காணொலிக் காட்சி வாயிலாக தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் மூன்றாம் உற்பத்தி இயந்திரம் தொடக்க விழா**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களது உரை**

தமிழ்நாடு செய்தித்தாள் காகித ஆலையில் நிறுவப்பட்டுள்ள உலகத்தரம் வாய்ந்த அதிநவீன மூன்றாவது காகித உற்பத்தி இயந்திரத்தை காணொலிக் காட்சி வாயிலாகத் தொடங்கி வைப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

தமிழகத்தில் கரூர் மாவட்டம், புகளூரில் அமைந்துள்ள தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், கடந்த 26 ஆண்டுகாலமாகக் காகித உற்பத்தியில் படிப்படியாக வளர்ச்சிபெற்று மகத்தான பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

இந்நிறுவனம் முதலில் ஆண்டுக்கு 90 ஆயிரம் மெட்ரிக்டன் காகித உற்பத்தித் திறன்கொண்ட இயந்திரத்துடன் செயல்படத் தொடங்கியது. பின்னர், மேலும் 90 ஆயிரம் மெட்ரிக்டன் காகித உற்பத்தி செய்யும் திறன் கொண்ட இரண்டாவது இயந்திரம் அங்கு நிறுவப்பட்டு ஆலையின் மொத்த உற்பத்தித் திறன் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மெட்ரிக் டன் என உயர்ந்தது. அதைத் தொடர்ந்து இரண்டு காகித உற்பத்தி இயந்திரங்களையும் நவீனமாக்கிடும் புதிய தொழில்நுட்பங்கள் இணைக்கப்பட்டு, அந்த இரண்டு காகித உற்பத்தி இயந்திரங்கள் மூலமாக இந்த ஆலையின் காகித உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2 இலட்சத்து 45 ஆயிரம் மெட்ரிக் டன் என அதிகரித்தது.

இந்நிலையில், தற்போது கழக ஆட்சியில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 1000 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன்பயனாக, நாளொன்றுக்கு 573 மெட்ரிக் டன் வீதம் – ஆண்டுக்கு மேலும் ஒரு இலட்சத்து 55 ஆயிரம் மெட்ரிக்டன் காகிதத்தை உற்பத்தி செய்திடும் உலகத்தரம் வாய்ந்த மூன்றாவது அதிநவீன காகித இயந்திரம் இந்த ஆலையில் நிறுவப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் காகித உற்பத்தித் திறன் மொத்தம் 4 இலட்சம் மெட்ரிக் டன் என உயர்ந்து சாதனை படைத்துள்ளது. இதன்மூலம், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் அச்சு மற்றும் எழுதும் காகித உற்பத்தியில் இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய நிறுவனமாக உருவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இயந்திரம் குறைந்த தண்ணீர் பயன்பாட்டுடனும், குறைந்த மின்சாரத்தினையும் கொண்டு செயல்படக்கூடியது. இந்த அதிநவீன மூன்றாவது காகித உற்பத்தி இயந்திரம் இன்று தொடங்கி வைக்கப் படுவதுடன், 67 கோடி ரூபாய் மதிப்பீட்டில், நாள் ஒன்றுக்கு 600 டன் உற்பத்தித் திறன் கொண்ட திடக் கழிவிலிருந்து சிமெண்ட் தயாரிக்கும் ஆலை; 135 கோடி

ரூபாய் மதிப்பீட்டில் நீராவி மற்றும் மின் உற்பத்திப் பிரிவை நவீனப்படுத்தும் திட்டம்; 175 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 300 டன் உற்பத்தித் திறன் கொண்ட காகிதத்திலிருந்து மை நீக்கிய காகிதக்கூழ் தயாரிக்கும் ஆலை; என 377 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்படவுள்ள மூன்று புதிய திட்டப் பணிகளுக்கும் இந்த விழாவில் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

காகித ஆலை அமைந்துள்ள பகுதியை இணைக்கக் கூடிய கரூர் – கோயம்புத்தூர் தேசிய நெடுஞ்சாலை ஓரங்களில், கரூர் – திருச்சி தேசிய நெடுஞ்சாலை ஆகியவற்றில், 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் திட்டமும் தொடங்கி வைக்கப்படுகிறது.

தமிழகத்திற்குத் தொடர்ந்து புகழ்சேர்த்து வரும் இந்த செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தின் வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்தி உழைத்து வருகின்ற அதிகாரிகளுக்கும், பணியாளர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எனது பாராட்டுகளையும், நல்வாழ்த்துகளையும் உரித்தாக்குகிறேன்.

நன்றி வணக்கம்.

........................................................................

வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.